www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

| | | |
|---|---|---|
| இந்து நாகரிகம் I<br>Hindu Culture I | Two hours<br>Gr -13 (2022) | 46 T I |

பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்குமுரிய பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்க வழக்கம் என்பவற்றின் முழுமைத் தொகுதியாகும்" எனக் கூறியவர்.
    1) ரி.கே சிதம்பரநாத முதலியார் 2) T.S எலியட் 3) சேர். ஜோன் மார்ஷல்
    4) மா. இராசமாணிக்கனார் 5) எட்வெட் ரெய்லர்

02. சிந்து நதி பாயும் பகுதியானது புதை பொருள் ஆய்வாளர்களால் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதி.
    1) கி.பி 1920 – கி.பி 1930 2) கி.பி 1922 – கி.பி 1930 3) கி.பி 1922 – கி.பி 1930
    4) கி.பி 1930 – கி.பி 1938 5) கி.பி 1920 – கி.பி 1922

03. செய்யுள் நடையிலும் உரை நடையிலும் அமைந்த மந்திரங்களைக் கொண்டுள்ள வேதம்.
    1) இருக்கு வேதம் 2) யசுர் வேதம் 3) சாம வேதம் 4) அதர்வ வேதம் 5) அர்த்த வேதம்

04. உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச் செழிப்பு போன்ற நன்மையளிக்கும் தன்மை உடைய பகுதி.
    1) பௌஷ்டிகானி 2) பேசயானி 3) அபிசாரணி
    4) ஸ்திரிகர்மாணி 5) இராஜகர்மாணி

05. உலக ஒழுங்காகப் பேணுபவனாகவும் மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் கூறப்படுபவன்.
    1) மித்திரன் 2) இந்திரன் 3) வருணன்
    4) அக்கினி 5) சூரியன்

06. ஆலய வழிபாட்டையும் அவை சார்ந்த அனுட்டானங்களையும் விதிகளாக விளக்குவதனால் சிவாகமங்களுக்கு வழங்கப்படும் பெயர்.
    1) சிரௌதம் 2) சுபதந்திரம் 3) ஆப்தவாக்கியம்
    4) சாத்திரங்கள் 5) தோற்றம்

07. தன்னிகரில்லாத் தலைவனின் தர்மநெறியை தெளிவான சிந்தனையுடன் விளக்கும் நூல்.
    1) வேதம் 2) ஆகமம் 3) இராமாயணம்
    4) மகாபாரதம் 5) புராணம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

08. மனச்சாட்சியை விட உயர் தர்மம் எதுவும் இல்லை என்ற பாடல் இடம் பெறுவது.
1) பரி பாடல் 2) கலித்தொகை 3) திருமுருகாற்றுப்படை
4) தொல்காப்பியம் 5) அகநானூறு

09. வாதாபியை வெற்றி கொண்டு வாதாபிக் கணபதியை தமிழ் நாட்டிற்கு வெற்றிச் சின்னமாக கொண்டுவந்த அரசன்.
1) முதலாம் நரசிம்ம பல்லவன் 2) மகேந்திரவர்மன் 3) பரமேசுவரவர்மன்
4) இராஜசிம்மன் 5) நந்திவர்மன்

10. அரச சபையிலும் வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அளவைக் கருவிகளிலும் ஆட வல்லானாகிய நடராஜ சின்னம் பொறிக்கப்பட்ட காலப்பகுதி.
1) சங்க காலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம்
4) சோழர் காலம் 5) நாயக்கர் காலம்

11. இனமத பேதங்களுக்கு அப்பால் உறவுகள் அனைத்தையும் துறந்து விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக் கொண்டு வாழ்ந்த பக்தி நெறியாளர்.
1) இராமானந்தர் 2) கபீர்தாசர் 3) பினேசதன்னியர் 4) மீராபாய் 5) துளசிதாஸர்

12. இராஜாராம் மோகன்ராஜினால் பிராமணன் என்னும் சஞ்சிகை வெளியிட்ட ஆண்டு.
1) 1815 2) 1820 3) 1823 4) 1825 5) 1829

13. 'தேச பக்த மெய்ஞானி' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட சீர்திருத்தவாதி.
1) தயானந்த சரஸ்வதி 2) இராமலிங்க அடிகளார் 3) மகாத்மகாந்தி
4) சுவாமி விவேகானந்தர் 5) இராஜாராம் மோகன்ராஜ்

14. மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட 'சுத்தி' என்னும் சடங்கை மேற்கொண்டவர்.
1) தயானந்த சரஸ்வதி 2) ஆறுமுக நாவலர் 3) விபுலானந்தர்
4) காசி வாசி செந்திநாதையர் 5) இராமகிருஷ்ண பரமஹம்சர்

15. சைவ சித்தாந்தம் கோட்பாட்டு வடிவம் பெற்ற காலப்பகுதியாக கொள்ளப்படுவது.
1) சங்க காலம் 2) சங்கமருவிய காலம் 3) பல்லவர் காலம்
4) சோழர் காலம் 5) நாயக்கர் காலம்

16. பொலன்னறுவைப் பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட இந்துக் கோயில்களுள் சிவன் கோயில்களின் எண்ணிக்கை.
1) 16 2) 10 3) 08 4) 05 5) 03

17. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் வைத்தியம் சார்பாகத் தோற்றம் பெற்ற நூல்.
1) பரராச சேகரம் 2) செகராச சேகரம் 3) கைலாய மாலை
4) சரசோதி மாலை 5) திருக்கரசைப் புராணம்

18. "பா தாங்கும் கோயிலும் பொன் மண்டபமும்" எனும் பாடலில் போற்றப்படும் ஆலயம்.
1) திருக்கேதீஸ்வரம் 2) திருக்கோணேஸ்வரம் 3) முன்னேச்சரம்
4) பொன்னம்பலவாணேச்சரம் 5) நகுலேச்சரம்



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

19. விக்கிரகபாகு புரோகிதர்கள் மூலம் வேள்விகளையும் இந்து சமயக் கிரியைகளையும் நடத்தினான் எனக்கூறும் இலக்கியம்.
 1) மகாவம்சம் 2) புராணம் 3) மகாபாரதம்
 4) இராமாயணம் 5) சூளவம்சம்

20. இந்து சாதனம் (Hindu organ) என்னும் பத்திரிகை வெளியிடப்பட்ட ஆண்டு.
 1) 1880 2) 1888 3) 1889 4) 1991 5) 1995

21. சுதேசிய எழுச்சிக்காகப் பாடுபட்ட தேசிய வீரராகப் போற்றப்படுபவர்.
 1) சேர் பொன் இராமநாதன் 2) ஆறுமுக நாவலர் 3) சுவாமி விவேகானந்தர்
 4) விபுலானந்தர் 5) தயானந்த சரஸ்வதி

22. காசிவாசி செந்தி நாதையர் எழுதிய நூல்களில் ஒன்று .
 1) மெய்ஞான தீபம் 2) சைவசமய போதினி 3) கந்தபுராண நவநீதம்
 4) மதங்க சூளாமணி 5) யாழ்நூல்

23. மூல விக்கிரகம் வெளியே தெரியாதபடி மேலே உமாமகேஸ்வரர் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஆலயம்.
 1) திருக்கோணேச்சரம் 2) திருக்கேதீச்சரம்
 3) முன்னேஸ்வரம் 4) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வம்
 5) நகுலேஸ்வரம்

24. வானவன் மாதேவி ஈஸ்வரம் எனப் பொலன்னறுவைக் காலத்தில் போற்றப்பட்ட ஆலயம்.
 1) முதலாம் சிவாலயம் 2) இரண்டாம் சிவாலயம் 3) மூன்றாம் சிவாலயம்
 4) நான்காம் சிவாலயம் 5) ஐந்தாம் சிவாலயம்

25. அங்கோவாப் ஆலயம் சர்வதேச கலாசார பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட ஆண்டு.
 1) 2000 2) 2005 3) 2008 4) 2010 5) 2012

26. "உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்கிளியில் உருவெழுதி.........." என்று பாடியவர்.
 1) திருநாவுக்கரசர் 2) திருமூலர் 3) கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி
 4) பரதமுனிவர் 5) அபிநவகுப்தர்

27. பல்லவர் காலத்தில் "சிற்பக் கலைக் களஞ்சியம்" எனப் போற்றப்பட்டது.
 1) வடக்குப்பிடாரி ரதம் 2) அர்ச்சுனன் ரதம் 3) சகாதேவ ரதம்
 4) தர்மராஜ ரதம் 5) கொற்றவை ரதம்

28. நடராஜ மூர்த்தத்தில் பிறைச்சந்திரன் குறித்து நிற்பது.
 1) ஞானம் 2) பேரழகு 3) பராசக்தி 4) முச்சக்தி 5) பேராற்றல்

29. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளில் சிறப்பானது.
 1) உடுக்கு 2) வீணை 3) புல்லாங்குழல் 4) சங்கு 5) யாழ்



agaram.lk

30. பல்லாவரம் குகைக்கோயில் கல்வெட்டில் தன்னை "சங்கீர்ண சாதி" எனக் குறிப்பிட்ட மன்னன்.
1) மகேந்திரவர்மன் 2) இராஜசிம்மன் 3) நந்திவர்மன்
4) பரமேசுவரவர்மன் 5) சமுத்திரகுப்தன்

31. "உயர் பிரமம் ஒன்றே அதற்கப்பால் ஒன்றுமில்லை" எனக் குறிப்பிடுவதன் மூலம் பிரமம் உயர்வானது என எடுத்துக் காட்டுவது.
1) முண்டக உபநிடதம் 2) சாந்தோக்கிய உபநிடதம் 3) பிரச்சின உபநிடதம்
4) சுவேதாஸ்வர உபநிடதம் 5) பிருகதாரணிய உபநிடதம்

32. 'இரணிய கர்ப்பம்' என்னும் பொன் முட்டையில் இருந்தே உலகம் படைக்கப்பட்டது என்னும் கருத்து இடம்பெறும் நூல்.
1) பிராமணங்கள் 2) ஆரணியகங்கள் 3) யசுர் வேதம்
4) இருக்கு வேதம் 5) புராணம்

33. யாகத்தின் மூலம் உலகம் படைக்கப்பட்டதாகக் குறிப்பிடும் சூக்தம்.
1) வருண சூக்தம் 2) புருஷ சூக்தம் 3) யம சூக்தம்
4) நாசதீய சூக்தம் 5) முனி சூக்தம்

34. உடம்பை விட்டுப் பிரிந்த பின் ஆன்மாவின் நிலை யாது? என்ற சிந்தனை இடம்பெறுவது.
1) சாந்தோக்கிய உபநிடதம் 2) பிருகதாரணிய உபநிடதம் 3) கடோப உபநிடதம்
4) சுவேதாஸ்வர உபநிடதம் 5) தைத்திரிய உபநிடதம்

35. பிரம்ம சூதத்திரத்தின் முதல் அத்தியாயத்தில் உள்ள சூக்த்திரங்களின் எண்ணிக்கை.
1) 180 2) 150 3) 145 4) 138 5) 75

36. "எனக்கு மேலானது எதுவும் இல்லை நூலில் மணிகள் போல் இவையாவும் என்னில் கோர்க்கப்பட்டுள்ளன" என்று கூறும் சிந்தனை இடம்பெறுவது.
1) புராணம் 2) ஆகமம் 3) தர்மசாஸ்திரம்
4) வேதம் 5) பகவத் கீதை

37. அத்வைதக் கோட்பாட்டின் திறவு கோலாக அமையப் பெற்ற நூலாக அமைவது.
1) உபநிடதம் 2) பிரம்ம சூத்திரம் 3) மாண்டுக்கிய காரிகை
4) ஆகமம் 5) மகாபாரதம்

38. பூர்ணா நதியை திசை மாறி ஓடச் செய்த தத்துவவாதியாகக் குறிப்பிடப்படுபவர்.
1) கௌடபாதர் 2) சங்கரர் 3) இராமானுஜர்
4) மத்துவர் 5) நீல கண்டர்

39. ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்த படியே மாறி விட்டதாகத் தோன்றுவது.
1) பிரதிவிம்ப வாதம் 2) அவச்சேத வாதம் 3) விவர்த்த வாதம்
4) ஏகான்ம வாதம் 5) பரிணாம வாதம்

40. ஆனந்தத் தீத்தர் என்ற பெயரால் அழைக்கப்படுபவர்.
1) மத்துவர் 2) இராமானுஜர் 3) கௌடபாதர்
4) மெய்கண்டார் 5) பாதராயனர்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

➢ **41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையின் I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>மீராபாய் | F<br>வேள்வி | K<br>சிவஞான போதம் | P<br>யாழ் நூல் |
| B<br>சாம வேதம் | G<br>திருமுறைகள் | L<br>முதியோர் கல்வி | Q<br>இருக்கு வேதம் |
| C<br>அக்கினி | H<br>சத்போதம் | M<br>நீண்ட ஆயுள் | R<br>1879 |
| D<br>நடராஜ சின்னம் | I<br>பிரசங்கம் | N<br>கீதகோவிந்தடீகா | S<br>பிரபக்தி மார்க்கம் |
| E<br>நாவலர் | J<br>தாள சமுத்திரம் | O<br>வாச்சியமாராயன் | T<br>நாயன்மார் வழிபாடு |

41. வேத காலத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) A,G,M,Q  2) C,F,M,Q  3) C,I,N,P  4) E,J,L,S  5) D,F,N,S

42. சோழர் ஆட்சிக் காலத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) B,G,K,P  2) C,I,N,T  3) E,J,M,R  4) A,F,M,T  5) D,G,K,T

43. வடநாட்டுப் பக்தி நெறியாளருடன் தொடர்புடைய தொகுதி.
1) A,G,M,S  2) E,H,O,S  3) A,H,N,S  4) B,J,N,T  5) B,F,K,S

44. ஈழுத்துச் சைவப் பெரியாருடன் தொடர்புடைய தொகுதி.
1) E,I,L,R  2) A,I,L,Q  3) C,H,K,Q  4) E,G,K,R  5) D,I,L,S

45. இசைக் கலையுடன் தொடர்புடைய தொகுதி.
1) B,H,K,T  2) A,J,L,Q  3) C,G,N,R  4) B,J,O,P  5) D,I,L,T

➢ **46 தொடக்கம் 50 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

46. இதிகாசத்தில் அடங்கும் இராமாயணம்
1) வடமொழியில் வான்மீகியால் முதலில் எழுதப்பட்டது.
2) கி.பி இரண்டாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.
3) வடமொழியில் இராம அவதாரம் விஷ்ணுவின் அவதாரமாகக் கொள்ளப்படும்.
4) ஆறு காண்டங்களை உடையது.
5) பிற்கால சீதா வழிபாடு, ஆஞ்சநேய வழிபாட்டிற்கு ஆதாரமானது.



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

47. ஈழத்து ஆலயங்களில் முன்னேஸ்வரம்
    1) புத்தளம் மாவட்டத்தில் சிலாபத்தில் அமைந்துள்ளது.
    2) வியாசர், இராமர் முதலியோர் வழிபட்ட தலமாகும்.
    3) இவ்வாலய தல விருட்சம் வன்னி மரமாகும்.
    4) குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்தை மீள அமைத்தான்.
    5) பௌர்ணமி தினத்தில் ஸ்ரீசக்கர பூசை இடம் பெறும்.

48. கட்டடக் கலை வளர்ச்சியில் சோழர்காலம்
    1) சோழர் கால கட்டடக்கலையை மூன்றாக வகுக்க முடியும்.
    2) சோழர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்ச நிலையைக் காட்டுவது முற்காலச் சோழர் கோயில்களாகும்.
    3) கட்டடக் கலையின் தொடக்கத்தைக் காட்டுவது விஜயாலய சோழேஸ்வரமாகும்.
    4) பிற்கால சோழர் கோயிலுக்கு உதாரணம் சிதம்பரம் ஆகும்.
    5) தஞ்சைப் பெருங்கோயில் சிறப்பானதாகும்.

49. இந்து தத்துவ சிந்தனைகளில் பிரம்ம சூத்திரம்
    1) பிரம்ம சூத்திரம் பாதராயணர் என்பவரால் இயற்றப்பட்டது.
    2) பிரம்ம ஆகிய பரம்பொருளைப் பற்றி விளக்கும் நூலாகும்.
    3) நான்கு அத்தியாயங்களைக் கொண்டது.
    4) பிரம்ம சூத்திரம், வேதாந்த சூத்திரம், சாரீரக சூத்திரம் என அழைக்கப்படுகிறது.
    5) பிரம்ம சூத்திரமானது 525 சூத்திரங்களைக் கொண்டது.

50. வேதாந்த தத்துவ வாதிகளில் இராமானுஜர்
    1) தென்னிந்தியாவில் காலடி என்னும் இடத்தில் பிறந்தார்.
    2) இராமானுஜரின் இயற்பெயர் இளையாழ்வார் ஆகும்.
    3) கிருஷ்ண பகவான் வேட்டுவ வடிவில் வந்து வழித்துணையானமை.
    4) சாதி இன மத வேறு பாடின்றி யாவரும் முத்தியடைய வழிகாட்டியமை.
    5) ஆன்மாக்கள் அறிவை இயல்பாக உடையவை என்றார்.

*(50x2=100 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஐந்தாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru
## 5th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| இந்து நாகரிகம் II<br>Hindu Culture II | Three Hours 10 min<br>Gr -13 (2022) | 46 | T | II |

## பகுதி – II

❖ பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. இந்து நாகரிக வரலாற்றில் வேதங்கள் பெறும் முக்கியத்துவத்தை மேல்வரும் விடயங்களில் ஆராய்க.

அ) வேதங்களின் அமைப்பு

ஆ) சமய மரபு

இ) தத்துவ சிந்தனைகள்

ஈ) முக்கியத்துவம்

*(5+5+5+5 = 20 புள்ளிகள்)*

agaram.lk

02. "தென்னக வரலாற்றில் சோழர் காலம் பொற் காலம்" இக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.

அ) அரசர்களின் பங்களிப்பு

ஆ) கோயில்களும் நுண்கலை வளர்ச்சியும்

இ) பக்தி இலக்கியம்

ஈ) வைணவ நெறி

*(5+5+5+5 = 20 புள்ளிகள்)*

03. சங்கருடைய வேதாந்தக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை விளக்கிக் கூறுக.

அ) பிரமம்

ஆ) ஆன்மா

இ) உலகம்

ஈ) ஆன்மா விடுதலைக்கான வழிமுறைகள்

*(5+5+5+5 = 20 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

## பகுதி II

04. சைவ சித்தாந்தத்தில் பதி பற்றிய கருத்துக்களை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் சிவாகமங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.

அ) ஆலய நிருமாணமும் திருவுருவ அமைப்பும்

ஆ) ஆகமங்களின் சிறப்பு

(10+10 = 20 புள்ளிகள்)

06. “மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக இந்து சமயம் வகுத்து அமைத்த அறநெறிமுறைகளுள் புருடார்த்தங்களும் ஒன்றாகும்” இக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு புருடார்த்தங்களின் சிறப்புக்களை ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. வட நாட்டு வைணவ பக்தி நெறியாளரான மீராபாய்யின் பங்களிப்பை விளக்குக.

(20 புள்ளிகள்)

08. இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு மேல்வரும் சமய நிறுவனங்கள் ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.

அ) சைவபரிபாலன சபை.

ஆ) இராம கிருஷ்ணமிஷன்

(10+10 = 20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk


agaram.lk